1984, ஏப்ரல் 9, திங்கட்கிழமை

பங்குனி 27, ருத்ரோத்காரி— திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்''

சிறிய படை உடையவன் தனக்குத் தகுந்ததாக உள்ள இடத்தில் பொருந்தி நின்றால், பெரிய படை உடையவன் தன் ஊக்கம் அழிந்து போவான்.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. டி. கரிய கவுண்டர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு டி. கரிய கவுண்டர் அவர்கள் 30-3-1984 ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. கரிய கவுண்டர் அவர்கள் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை, வட ஆற்காடு மாவட்டம் செங்கம் தொகுதியிலிருந்து தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக காங்கிரஸ் இயக்கத்திலிருந்து தொண்டாற்றியவர். 1941-42 ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்ட வாரியத்தின் 'டிஸ்ட்ரிக்ட் போர்டின்' தலைவராக இருந்தார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*)உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சர்பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]